செ.வெ.எண்:14 நாள்:06.06.2019

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் நலத்திட்டங்கள் கண்காணிப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தொழிலாளர் நலத்துறை (சமூக பாதுகாப்பு திட்டம்) மூலம் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் நலத்திட்டங்கள் தொழிலாளர்களை விரைவாக சென்றடைவதை கண்காணிக்க உருவாக்கப்பட்ட மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (06.06.2019) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் நலத்திட்டங்கள் தொழிலாளர்களை விரைவாக சென்றடைவதை கண்காணிக்க மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கண்காணிப்பு குழுவினர் நலவாரியங்களின் நலத்திட்டங்கள் குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். நலவாரிய அலுவலகம் கோரம்பள்ளத்தில் உள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக கட்டிடத்தில் இயங்குகிறது. புதிய கட்டிடத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை விரைவாக செய்து முடித்து தரப்படும். தொழிற்சங்க பிரதிநிதிகளால் வைக்கப்பட்ட நலவாரிய நலத்திட்டங்கள் தொடர்பான கோரிக்கைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

கூட்டத்தில் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.பாலமுருகன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.தனலட்சுமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமாசங்கர், நிர்வாக தரப்பு பிரதிநிதிகள் திரு.செல்வராஜ் மற்றும் தொழிலாளர் பணியகம் திரு.பணி.தா.செல்வசார்சு, தொழிற்சங்க பிரதிநிதிகள் திரு.அருணாசலம் (ATP), திருமதி.கிருஷ்ணவேணி (CITU), திரு.ராஜீ (INTUC), திரு.சிவராமன் (AICCTU), திரு,வேலாயுதம் (இந்திய மஸ்தூர்சபா) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.